Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | ASSISTANT SESSIONS JUDGE,<br>KULITHALAI. |
| Calendar | |
| Miscellaneous | Case No.**S.C. 08 / 2020** |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution அசா. 1<br><br>Defense<br>Court |
| Name | செந்தில் |
| Father's Name | கருப்பையா |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.12.2021.** | |

முதல் விசாரணை

நான் மோலப்பட்டியில் வசித்துவருகிறேன். நான் லாரி ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எதிரி மோகனை எனக்கு தெரியும். 19.05.2019 அன்று வெள்ளப்பட்டியில் மாரியம்மன் கோவில் திருவிழாவை முடித்துவிட்டு தோகமலை அருகில் உள்ள எட்டமநாய்க்கன் பட்டியில் உள்ள எனது நண்பர் செந்தில் வீட்டிற்கு சென்றிருந்தேன். நண்பர் செந்தில் வீட்டின் முன்னால் நின்று நானும் எனது நண்பரும்பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரி மோகன் எங்களுக்கு அருகில் நின்றுக்கொண்டிருந்தார் அவர் குடிபோதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார். அப்போது நான் எதிரியிடம் சத்தம் போடவேண்டாம் இங்கிருந்து செல்லுங்கள் என்று கூறியதற்கு அவர் அங்கிருந்து செல்லவில்லை அங்கேயே இருந்து

சத்தம்போட்டுக்கொண்டிருந்தார். எனது நண்பரும் அவரது மனைவியும் எங்களை அவரது வீட்டிற்குள் அழைத்துச் சென்றுவிட்டார்கள். நாங்கள் உணவு அருந்திவிட்டு நண்பர வீட்டின் வெளியே கட்டில் போட்டு படுத்திருந்தோம். சுமார் இரவு 9.30 மணியளவில் அங்கு வந்த எதிரி என்னைப்பார்த்து வெளியூர் கார நாய் தேவடியா பயலே என திட்டி கையில் வைத்திருந்த அறுவாளால் எனது இடது காதின் பின்புறம் வெட்டினார். நான் தடுத்த போது எனது வலது கை கட்டைவிரலில் வெட்டுப்பட்டு விரல் துண்டானது. எனது இடது மார்பிலும் அறுவாளால் எதிரி வெட்டினார். இடது முன்கையின் பின்புறம் எதிரி அறுவாளால் வெட்டினார். எனது இடது பக்க முதுகிலும் எதிரி அறுவாளால் வெட்டினார். அதன்பிறகு எனது நண்பரும் அவரது மனைவியும் சேர்ந்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் வந்து என்னை மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள் அங்கு எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக திருச்சி அரசுமருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். அங்கு நான் உள்நோயாளியாக 3 மாதம் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலுந்த போது 20.05.2019 அன்று தோகமலை போலீஸார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் அவர்களுக்கு புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள இடதுகை பெருவிரல் ரேகை என்னுடையதுதான் அது அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படுவது தான் எதிரி என்னை வெட்டுவதற்கு பயன்படுத்திய அறுவாளாகும் அது சா.பொ.1. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

ஒம்/செந்தில்

ஒம்/M.சண்முககனி,
சார்பு நீதிபதி,
குளித்தலை.